**PRESS RELEASE**

**Coastal Aquaculture Hatcheries Escape Regulatory Eye ; Found in Violation of Key Norms**

Chennai, December 2020 - None of the 65 coastal aquaculture hatcheries surveyed along 130 kilometers of Tamil Nadu's two coastal districts -- Chengalpattu and Villupuram have required licenses under CRZ Notification and Water Act, and most failed to comply with the siting setbacks prescribed by the Coastal Aquaculture Authority (CAA) Act. The CAA Act prohibits setting up of all aquaculture facilities within 200 metres of the HTL. Units coming up outside this region but within the CRZ would require a clearance under the Notification, and a Consent to Operate under Air and Water Acts. 63 units violated CAA Act's setback norm, and none has a CRZ clearance or Consent to Operate. These findings are part of "Below the Radar" -- a report published by the Coastal Resource Centre.

Coastal aquaculture hatcheries, that culture and spawn shrimp have been constructed within the "No Development Zone (NDZ)" of 200m from notified High Tide lines and on coastal sand dunes notified as "Ecologically Sensitive" (CRZI-A) areas. However, with no regulatory oversight from the Coastal Aquaculture Authority or the Tamilnadu Coastal Zone Management Authority hatcheries continue to operate in gross violation of stipulated norms. "A total regulatory gap has been revealed as there seems to be nobody who is overseeing the operation of what could potentially be a pollution source with serious implications on the environment and health locally" said K Bharathi of South Indian Fishermen Welfare Association.

Makeshift bridges constructed with wooden logs carry lengths of PVC pipe into the Bay of Bengal. These have been observed releasing untreated, unregulated sewage holding no consent from the state's Pollution Control Board. It has also been established that groundwater drawl is prevalent among the hatcheries for Industrial use. Hatcheries, Piggeries and Poultry Farms are regulated by the Central Pollution Control Board as Industries requiring consent to establish and consent to operate under the Water and Air acts. "A lot of pharmaceutical waste and other medicines for aquatic animals can be observed dumped with garbage in the vicinity of the hatcheries. Officials from both the Environment Department and the TNPCB have turned a blind eye." added K Bharathi.

Large buildings, with sprawling compound walls that house these aquaculture facilities have mushroomed along the coast, blocking access to coastal commons. "Unauthorised and unregulated construction of aquaculture hatcheries and other such large buildings have greatly affected local fisherfolk as use of Periya Valai is obstructed due to these constructions" said S. Palayam, a fisherman from Chennai. In the months of January to March, when the seas are still, Chennai's fisherfolk haul the communal *Peria Valai* (Big Net) to catch mackerel, prawns and perch. The *Peria Valai*, which is hauled by 50 to 60 able-bodied fishers requires untramelled access to kilometres of beach lengths with sandy stretches extending landwards for at least 200-500 metres.

Apart from land use change and losing secure access to coastal commons, fisherfolk also complain that they are being kept in the dark and their traditional and customary uses and rights disregarded. "There is no information given to any of the fisherfolk what is the kind of effluent they release. Sometimes it is brown in colour with a strong odour. Although the villages are close

to the hatcheries, no information or warnings are shared with the village either by the hatcheries, or the government agencies" Said Sathish from Alamparai, in Chengalpattu District.

"Detailed survey of coastal aquaculture hatcheries along all districts in Tamilnadu must be undertaken and compliance to CRZ Notification 2011, Coastal Aquaculture Authority Act 2005 and Water and Air Acts of all hatcheries along TN coast must be verified urgently. Those found in violation must be removed and the natural state of the area restored" said K Saravanan, one of the authors of the Report. "These illegalities of particular significance in light of the ongoing Vigilance department raids on the Environment Department and TNPCB officials. Officials responsible must be identified and prosecuted " he added.

For More Information, Contact : 9176331717, 9444467130 or 9791122180

Visit www.coastalresourcecentre.wordpress.com/resources to access the full report.

**செய்தி வெளியீடு**

**கண்காணிக்கப்படாத கடலோர நீர்வாழ் உயிரின குஞ்சுபொரிப்பகங்கள்- பிரதான ஒழுங்குமுறை விதிமுறைகளை மீறுவதாக ஆய்வில் கண்டறிவு.**

சென்னை, டிசம்பர் 2020 : தமிழ்நாட்டின் இரண்டு கரையோர மாவட்டங்களான செங்கல்பட்டு மற்றும் விழுப்புரத்தின் 130 கிலோமீட்டர் தொலைவில் ஆய்வு நடத்தப்பட்ட 65 கடலோர நீர்வாழ் உயிரின குஞ்சுபொரிப்பகங்களில் எதுவுமே கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிப்பாணை (CRZ notification) மற்றும் நீர் மாசு தடுப்பு சட்டத்தின் (Water Act) கீழ் அனுமதியின்றி செயல்பட்டு வருகின்றன. மேலும் பெரும்பாலானவை கடலோர நீழ்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட (Coastal Aquaculture Authority Act) கட்டுப்பாட்டு விதிகளுக்கு இணங்க தவறிவிட்டன. உயர் அலை கோடிலிருந்து (HTL) 200 மீட்டருக்குள் அனைத்து நீர்வாழ் உயிரின வளர்ப்பகங்களை அமைப்பதை CAA சட்டம் தடை செய்கிறது. இந்த எல்லைக்கு வெளியே, ஆனால் CRZ பகுதிக்குள் வரும் அலகுகள் CRZ அறிவிப்பாணையின் கீழ் அனுமதி பெற வேண்டும். மேலும் காற்று மற்றும் நீர் சட்டங்களின் (Air and Water Act) கீழ் இயங்குவதற்கான ஒப்புதல் (consent to operate) தேவைப்படும். 63 அலகுகள் CAA சட்டத்தின் விதிமுறையை மீறியுள்ளன. மேலும் எந்த ஒரு அலகுக்கும் CRZ அனுமதியோ அல்லது இயங்குவதற்கான ஒப்புதலோ இல்லை. இவை "Below the radar" என்று கடற்கரை வள மையம் (Coastal resource center) வெளியிட்ட ஆய்வறிக்கையின் கண்டுபிடிப்புகள்.

இறால் முட்டை உற்பத்தி மற்றும் வளர்ப்பு செய்கின்ற கடலோர நீர்வாழ் உயிரின குஞ்சுபொரிப்பகங்கள், அறிவிக்கப்பட்ட உயர் அலை கோடுகளிலிருந்து 200 மீட்டர் தொலைவில் உள்ள "வளர்ச்சி தடை செய்யப்பட்ட பகுதிகளிலும்" (No Development Zone(NDZ)) கடலோர மணல் குன்றுகளை உள்ளடக்கிய "சூழல் ரீதியாக நுண்த்தன்மை வாய்ந்த பகுதி" (Ecologically sensitive zone) (CRZI-A) என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளிலும் கட்டப்பட்டுள்ளன.

இருப்பினும், கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையம் அல்லது தமிழ்நாடு மாநில கடற்கரை மண்டல மேலாண்மை ஆணையத்தின்(TNSCZMA)எந்தவொரு ஒழுங்குமுறை மேற்பார்வையும் இல்லாமல், நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளை முற்றிலும் மீறி இக்குஞ்சுப் பொரிப்பகங்கள் செயல்படுகின்றன. "சுற்றுச்சூழலிலும் ஆரோக்கியத்திலும் கடுமையான தாக்கங்களைக் ஏற்படுத்தும் மாசுபாட்டின் மூலமாக இருக்கக்கூடிய செயற்பாடுகளை மேற்பார்வையிடும் எவரும் இல்லாததால் ஒழுங்குமுறை அமைப்பிலுள்ள வெற்றிடம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது" என்று தென்னிந்திய மீனவர் நலச் சங்கத்தைச் சார்ந்த கே.பாரதி கூறினார்.

மரப் பலகைகளால் கட்டப்பட்ட தற்காலிக பாலங்கள் பல அடி நீள PVC குழாய்களை வங்க கடலுக்குள் கொண்டு செல்கின்றன. இவை மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதியின்றி சுத்திகரிக்கப்படாத கழிவுநீரை வெளியிடுவதைக் காணலாம். குஞ்சுப் பொறிபகங்கள் தொழில்துறை பயன்பாட்டிற்கான நிலத்தடி நீரை உறிஞ்சுவது அதிகமாக உள்ளது என்பதும் நிறுவப்பட்டுள்ள உண்மை.

குஞ்சுப்பொரிப்பகங்கள், பன்றிப்பண்ணைகள் மற்றும் கோழி பண்ணைகள் ஆகியவை மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன, அவை நீர் மற்றும் காற்று சட்டங்களின் (Air and Water Act) கீழ் செயல்பட ஒப்புதல் தேவைப்படும் தொழிற்சாலைகள் என

வரையறுக்கப்பட்டுள்ளன. "நீர்வாழ் விலங்குகளுக்கான ஏராளமான மருந்து கழிவுகள் மற்றும் பிற மருந்துகள் குஞ்சுப்பொரிப்பகங்கள் அருகிலுள்ள குப்பைகளுடன் கொட்டப்படுவதை பரவலாக காணலாம். சுற்றுச்சூழல் துறை மற்றும் TNPCB ஆகியவையின் அதிகாரிகளும் இவற்றை கண்காணிப்பதில்லை. " என கே.பாரதி கூறினார்.

இந்த நீர்வாழ் உயிரின வளர்ப்பகங்களைக் கொண்டிருக்கும் பரந்த மதில் சுவர்கள் கொண்ட பெரிய கட்டிடங்கள், கடலோர பொதுவெளிகளுக்கான வழியை அடைக்கின்றன."அங்கீகாரமற்ற மற்றும் கட்டுப்பாடற்ற நீர்வாழ் உயிரின குஞ்சுப்பொரிப்பக கட்டிடங்கள் மற்றும் இதுபோன்ற
பெரிய கட்டிடங்களால் பெரிய வலை பயன்பாடு தடைபட்டுள்ளது. இது உள்ளூர் மீனவர்களை பெரிதும் பாதித்துள்ளது" என்று சென்னையைச் சேர்ந்த மீனவர் எஸ்.பாளையம் கூறினார்.

ஜனவரி முதல் மார்ச் மாதங்களில், சென்னையின் மீனவர்கள் கானாங்கெளுத்தி, இறால்கள் மற்றும் நவரை ஆகியவற்றைப் பிடிக்க பெரிய வலை கொண்டு செல்கின்றனர். பெரிய வலை, 50 முதல் 60 உடல் வலிமை கொண்ட மீனவர்களால் இழுத்துச் செல்லப்படுகிறது, பல கிலோமீட்டர் நீளத்திற்கு கட்டுப்பாடற்ற வழி தேவைப்படுகிறது, நிலப்பகுதியில் மணல் பரப்பு குறைந்தது 200-500 மீட்டர் வரை தேவைப்படுகிறது.

நில பயன்பாட்டு மாற்றம் மற்றும் கடலோர பொதுவுடைமைகளின் பாதுகாப்பான பயன்பாட்டை இழப்பதை மட்டுமல்லாமல், மீனவர்கள் அவர்களின் பாரம்பரிய மற்றும் வழக்கமான பயன்பாடுகள் மற்றும் உரிமைகள் புறக்கணிக்கப்படுவதாகவும் புகார் கூறுகின்றனர். "எந்தவொரு மீனவர்களுக்கும் குஞ்சுப்பொரிப்பகங்கள் எந்த வகையான கழிவுகளை வெளியிடுகிறார்கள் என்பது குறித்து எந்த தகவலும் கொடுக்கப்படவில்லை. சில நேரங்களில் அவை அதிக நாற்றத்துடனும் பழுப்பு நிறத்திலும் இருக்கும். கிராமங்கள் குஞ்சுப்பொரிப்பகங்களுக்கு நெருக்கமாக இருந்தாலும், எந்த தகவலும் எச்சரிக்கையும் கிராமத்தினருக்கு பொரிப்பகங்களோ அல்லது அரசு நிறுவனங்களோ பகிர்வதில்லை. "என்று ஆலம்பரை கிராமத்தைச் சேர்ந்த சதீஷ் கூறினார்.

"தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கடலோர நீர்வாழ் உயிரின குஞ்சுப்பொரிப்பகங்கள் பற்றிய விரிவான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் CRZ அறிவிப்பாணை 2011, கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்டம் 2005 ,நீர் மற்றும் காற்று சட்டங்களுக்கு (Water and Air Act) உட்பட்டு செயல்படுகின்றனவா என்று உடனடியாக சரிபார்க்கப்பட வேண்டும். இச்சட்டங்களை மீறப்பட்டதாகக் கண்டறியப்பட்டவை அகற்றப்பட வேண்டும். மேலும் அந்த பகுதியின் இயல்பான நிலை மீட்டெடுக்கப்பட வேண்டும் "என்று அறிக்கையின் ஆசிரியர்களில் ஒருவரான கே.சரவணன் கூறினார். "இவ்வாய்வறிக்கையின் தகவல்கள் தற்போது லஞ்ச ஒழிப்பு துறை நடத்தும் சுற்றுச்சூழல் துறை மற்றும் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் (TNPCB) அதிகாரிகள் மீதான சோதனையில் முக்கியத்துவம் வாய்ந்தது. இதுபோன்ற பெரிய அளவிலான சட்டவிரோத நடவடிக்கைகளை அனுமதித்த ஒழுங்குமுறை அதிகாரிகள் மீது வழக்குத் தொடரப்பட வேண்டும்" என்றும் அவர் கூறினார்.

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்: 9176331717, 9444467130 அல்லது 9791122180

முழு அறிக்கையை,www.coastalresourcecentre.யில் காண்க